அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.18/94

எனது இல: 111/0266/2/68(பொது)எல்/
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
1994, மே மாதம் 13 ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## தாபன விதிக்கோவையின் திருத்தங்கள் XXIV அத்தியாயம்-சட்டத்தரணிகள் குழாம்.

தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11:4ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

11:4 சொத்தின் உரித்து பற்றிய ஓர் அறிக்கையை 11:4:2 அல்லது 11:4:3இல் குறிப்பிட்டுள்ள ஆட்களில் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

11:4:1 மாறாது தொடர்ந்து இருக்கும்.

11:4:2 சொத்து அமைந்துள்ள பிரதேசத்தின் அரச சட்டத்தரணி

11:4:3 பிரசித்த நொத்தாரிசு ஒருவராகப் பத்து(10) வருட கால அனுபவத்தையுடையவரும் காணி அமைந்துள்ள நீதிமன்ற நீதி நிருவாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் செயலாற்றும் எவரேனும் ஒரு சட்டத்தரணி.

உரித்து பற்றிய அறிக்கையை 11:4:3இல் குறிப்பிட்டுள்ள ஒரு சட்டத்தரணியிடம் பெறுவாராயின், அத்தகைய அறிக்கையுடன் பின்வரும் 11:4:4இல் குறிப்பிட்டுள்ளவாறான ஒரு சான்றிதழும் அத்தகைய சட்டத்தரணியால் நிரப்பப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

11:4:4 "..................(காணியின் பெயர்)க்கு உரிய உரிமைச் சான்றிதழ் நல்ல அவதானிப்புடன் என்னால் தயாரிக்கப்பட்டதுடன் நான் பிரசித்த நொத்தாரிஸ் ஒருவராக 10 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தையுடையவரென்றும் இக்காணி அமைந்துள்ள நீதிமன்ற நிருவாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் சட்டத்தரணியாகச் செயலாற்றுகிறேன் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்."

திகதி:............ ..................
கையொப்பம்

பெயர்:..............

உத்தியோக இலச்சினை

02. உரிமை பற்றிய ஓர் அறிக்கையின் பொருட்டுச் சட்டத்தரணி ஒருவருக்கு வழங்க வேண்டிய கட்டண அளவுகள் தொடர்பிலுள்ள ஏற்பாடுகள் இத்தால் நீக்கப்படுகின்றது.

03. இதன்படி தாபன விதிக்கோவையின் 26ஆம் பின்னிணைப்பு நீக்கப்படுகின்றது.

ஒப்பம்: வை.பீ.புஸ்ஸெதெனிய.
செயலாளர்,